பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 04 2025 SATURDAY 7.15 PM

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- நாட்டின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு மனோகர் லால் தெரிவித்துள்ளார்.

- சர்வதேச வான்வழி கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப விமானப்பயணிகளின் பாதுகாப்பு மற்றும் வசதிகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்று விமான நிறுவனங்களுக்கு, மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

- இளம் மாற்றுத்திறனாளிகளின் திறன் மேம்பாட்டிற்கு செயற்கை நுண்ணறிவு உறுதுணையாக இருக்கும் என்று தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.

- கத்தோலிக்க திருச்சபை தலைவர் போப் பிரான்சிஸ் உடல் வாடிகனில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் இன்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

- துனிஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Zeel Desai இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>

நாட்டின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு மனோகர் லால் தெரிவித்துள்ளார்.

சிக்கிம் மாநிலம் கேங்டாக்கில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின் உற்பத்தியை அதிகரிப்பதன்மூலம், கூடுதல் வேலைவாய்ப்புகளையும் உருவாக்க முடியும் என்று தெரிவித்தார்.

மலைப்பகுதிகள் அதிகம் உள்ள கிழக்கு மாநிலங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு கூடுதல் நிதி தேவைப்படுவதாக அவர் கூறினார்.

சிக்கிம், அருணாச்சலப்பிரதேசம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் நீர்மின் உற்பத்திக்கான வாய்ப்புகள் உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்பு செய்கிறது.

இது, இரவு 8 மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>

சர்வதேச வான்வழி கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப விமானப்பயணிகளின் பாதுகாப்பு மற்றும் வசதிகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்று விமான நிறுவனங்களுக்கு, மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அண்மையில் சர்வதேச வான்வழி கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப விமான வழித்தடங்கள் மாற்றுப்பாதையில் இயக்கப்பட்டு வருவது, காலதாமதத்திற்கு வழிவகுக்கும் என்று தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான தகவல்களை முன்கூட்டியே விமான பயணிகளுக்கு முறையாக தெரிவிக்க வேண்டும் என்றும், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விமானங்களில் பயணிகளுக்கான உணவு, குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளை உறுதி செய்யுமாறும் விமான நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>

நாட்டில் உள்ள 10 லட்சத்திற்கும் மேற்பட்ட இளம் மாற்றுத்திறனாளிகளின் திறன் மேம்பாட்டிற்கு செயற்கை நுண்ணறிவு உறுதுணையாக இருக்கும் என்று தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டம் உதகையில் நடைபெற்ற பல்கலைக்கழக துணைவேந்தர்களுக்கான இரண்டு நாள் மாநாட்டின் நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், நானோ ரோபோட்டிக்ஸ் தொழில்நுட்பம் பெரிய அளவில் வளர்ச்சியடைந்து வருவதாக தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை அடைவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்று திரு ஆர் என் ரவி கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

நாட்டின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்புப்படைகளின் செயல்பாடுகள் குறித்த நேரடி ஒளிபரப்பை தவிர்க்க வேண்டும் என்று அனைத்து ஊடகங்களுக்கும், மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதில் ஊடகங்கள், டிஜிட்டல் வலைதளங்கள், தனி நபர்கள் ஆகியோர் முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியமான தகவல்களை முன்கூட்டியே ஊடகங்கள் மூலமாக வெளிப்படுத்துவது பாதுகாப்புப்படையினரின் செயல் திறனை பாதிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேபிள் தொலைக்காட்சி, நெட்வொர்க் திருத்த விதிகளின்படி, பாதுகாப்புப்படையினரின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் நேரடி ஒளிபரப்பு தடை செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>

வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய அரசு பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி அவர் பேசினார்.

பணிகளில் உள்ள சாவல்களை எதிர்கொள்வதுடன், வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று திரு அஷ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

உடான் திட்டத்தின்கீழ், 625 வழித்தடங்களில் விமான சேவை இயக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதன் காரணமாக, இந்த வழித்தடங்களில் ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் பயணம் மேற்கொண்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

விமான நிலையங்களின் எண்ணிக்கையும் 74-லிருந்து, 159-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

கத்தோலிக்க திருச்சபை தலைவர் போப் பிரான்சிஸ் உடல் வாடிகனில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் இன்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறுதிச்சடங்கில் 2 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

இதில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, அமெரிக்க அதிபர் திரு டொனல்டு ட்ரம்ப் உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

போப் பிரான்சிஸ் சமூகத்திற்கு ஆற்றியுள்ள சேவை என்றென்றும் நினைவுக்கூரத்தக்கது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பில், போப் பிரான்சிஸிஸுக்கு நாட்டு மக்களின் சார்பில் அஞ்சலி செலுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்திற்கு உரிய பதிலடி கொடுக்கப்படும் என்று மத்திய பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு சஞ்சய் சேத் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உள்துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்பேரில் இந்தியாவில் உள்ள பாகிஸ்தானியர்கள் அந்நாட்டிற்கு திரும்ப அனுப்பப்படுவார்கள் என்று கூறினார்.

பயங்கரவாத செயல்களுக்கு பாகிஸ்தான் கடந்த 30 ஆண்டுகளாக உதவி வருவதை அந்நாட்டு அமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

நாட்டின் ஆன்மா மீது தாக்குதல் நடத்துபவர்கள் யாராக இருந்தாலும், தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று திரு சஞ்சய் சேத் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

இந்தாண்டுக்கான கைலாஷ் மானசரோவர் யாத்திரை ஜூன் மாதம் தொடங்கி, ஆகஸ்ட் மாதம் வரை நடைபெறும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதற்கான விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக அளிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

50 பேர் அடங்கிய ஐந்து குழுக்கள் உத்தராகண்ட் மாநிலம் Lipulekh Pass வழியாகவும், இதுதவிர மேலும் 10 குழுக்கள் சிக்கிம் மாநிலம் Nathulapass வழியாகவும் யாத்திரை மேற்கொள்ளும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

உலக கால்நடை மருத்துவ தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

கால்நடை மருத்துவர்களின் பணியை அங்கீகரித்து கௌரவிக்கும் வகையில், ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் கடைசி சனிக்கிழமையன்று இத்தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இதையொட்டி, புதுதில்லியில், மத்திய கால்நடை பராமரிப்பு அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய அத்துறைக்கான இணையமைச்சர் திரு எஸ் பி சிங் பாஹேல், பால்வளத்துறையில் இந்தியா முன்னணி நாடாக உள்ளது என்று தெரிவித்தார்.

நாட்டில் பசுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் செயற்கை கருவூட்டல் முறை ஊக்குவிக்கப்பட்டு வருவதாகவும், இதன்மூலம், பால் சார்ந்த பொருட்களுக்கான தேவையை பூர்த்தி செய்ய முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

அரசு பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள் பொறுப்புடனும், நேர்மையுடனும் பணியாற்ற வேண்டும் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், உண்மையான சேவைகள் மூலம், வலுவான இந்தியாவை கட்டமைக்க முடியும் என்று உறுதிபட தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு இளையோருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக திரு பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சுரங்கம் மற்றும் நிலக்கரித்துறை வலுவான அடித்தளம் அமைத்துள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், எஃகு உற்பத்தி நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றுவதாக குறிப்பிட்டார்.

எஃகு உற்பத்தியில் உலக அளவில் இந்தியா இரண்டாவது பெரிய நாடாக உருவெடுத்துள்ளது என்று அவர் கூறினார்.

மத்திய – மாநில அரசுகள் மற்றும் தொழில்துறையினர் இணைந்து செயல்படுவதன்மூலம், எஃகு உற்பத்தியில் சுயசார்பு நாடாக உருவெடுக்க முடியும் என்று திரு கிஷன் ரெட்டி நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

துனிஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Zeel Desai இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 6-0, 4-6, 6-3 என்ற செட் கணக்கில், ஆஸ்திரியாவின் Arabella Koller–ஐ வென்றார்.

--------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது

<<<<<<END>>>>>